சைவ பரிபாலன சபை வெளியீடு

செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

விலை:- ரூபா 12

# இந்து சாதனம்

(HINDU-ORGAN)

புத்தகம் : 114 | சுபானுவருடம் புரட்டாசி - மார்கழி - 2003 | இதழ் : 4,5,6

## நினைவு நல்லது வேண்டும்

இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு கண்மூடித் திறப்பதற்குள் நிறைவு பெற்று விட்டது. 'சமாதானம்' என்ற விடியலின் விடிவெள்ளி நிகழ்வுகள் பல நடந்தேறின. சர்வதேசமே சமாதானத்திற்கு வரவேற்புக் கூறியது. அரசியல் ஆணவம், அதிகாரப் போட்டி என்பன பெரும் புயலாகச் சுழன்றடித்தன. சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லையோ? என்று மனம் குமுறும் நிலையில் ஆண்டு முடிவடைகின்றது. அமெரிக்க பிரதிராஜாங்க அமைச்சர் ரிச்சேர்ட் ஆர்மிடேஜ் அமைச்சர் மிலிந்த மொறகொடாவைச் சந்தித்தபோது அரசியல் நெருக்கடியை தீர்த்து சமாதானம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மிகவும் நியாயமான பேச்சுத்தான்! ஜனாதிபதி, பிரதமமந்திரி ஆகியோர் நல்ல நினைவுகளுடன் நாடு வளம்பெற மக்கள் மன அமைதிபெற நடக்க முற்பட்டால் சூரியனைக் கண்ட பனிபோல் யுத்த பயம் பறந்தோடிவிடும்.

இந்த மார்கழிமாதம் 'எயிட்ஸ்' விழிப்புணர்வு வாரமாகக் காணப்பட்டது. தேசியத் தலைவரின் பணிப்புரைப்படி இளைய தலைமுறையைப் பாதுகாக்க - சீரழிவுச் செயல்களைப் போக்கடிக்க - விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. போதைவஸ்து பாவனை, ஆபாசப்படங்களை ஆவலோடு பார்த்தல், பெரியோரை மதியாமை, பாலியல் தொடர்பான சேட்டைகள், சச்சரவுகள் அதிகரித்துள்ளமை என்பன '2003' ஆண்டில் மலிந்து காணப்பட்டன. இந்த நிலை மாறவேண்டும். மக்கள் மனதில் நல்ல நினைவுகள் தோன்றினால் இவற்றிற்கு இடமே இல்லாமல் போய்விடும். "அகத்தூய்மை" அனைவரிடமும் காணப்படவேண்டும். இறைவழிபாடு, நற்சிந்தனை, சமூகசேவை மனப்பாங்கு என்பன எம்மிடையே வேரூன்ற வேண்டும்.

எமது தமிழ்ப் பிரதேசத்தில் பதினான்கு வயதிற்கு உட்பட்டோரில் சுமார் முப்பதினாயிரம் சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என்ற அறிவிப்பு மிகவும் கவனிக்கத்தக்கது. அறியாமை என்ற கொடிய அரக்கன் அழிக்கப்படவேண்டியவன். இந்த நிலை தோன்றுவதற்கு "வறுமை" காரணமாக இருந்திருக்கின்றது. கொடிய யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் இன்னல்களை இல்லாமையை இல்லாமல் செய்ய அரசாங்கமும் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை என்பதை அமைச்சர் மகேஸ்வரன் அவர்களே பாராளுமன்றத்தில் இடித்துரைத்திருக்கின்றார். புனர்வாழ்வு வேலைகள் பெரிதாக இடம்பெறவில்லை என்பதை அரச அதிபரும் ஏற்றுக்கொண்டுள்ளார். இவர்கள் எம்மவர்கள். இவர்களது இன்னல்களை நாம் தீர்க்க வேண்டும் என்ற நல்ல சிந்தனை நமது தமிழர்களிடம் காணப்படவேண்டும். சிந்தனை செயல் வடிவம் பெறவேண்டும். நல்ல நினைவுகள் - நல்ல செயற்பாடுகள் இன்று அவசியமாகின்றன. நாங்கள் ஒவ்வொருவரும் நல்ல நினைவுகளோடு நல்ல நல்ல சமூகச் செயற்பாடுகளைச் செய்யத் தொடங்கவேண்டும். எமது 'விடிவு' நற்சிந்தனையில்!

**முதலில் உங்களை நீங்கள் நம்புங்கள். உங்களிடம் உள்ள அளவற்ற ஆற்றலை வெளிப்படுத்த முயலாதபோதுதான் உங்களுக்குத் தோல்வி ஏற்படுகின்றது. கடவுளை நம்புவதன் மூலம் இந்த உலகத்தையே அசைத்துவிடமுடியும். இவ்வாறு அன்று அறைகூவல் விடுத்தவர் சுவாமி விவேகானந்தர். அன்று அவர் விடுத்த நற்செய்தி நமக்கு நன்றாகப் பொருந்துகின்றது. சுகத்தையே செய்யும் சங்கரனை வழிபட்டு சைவத் தமிழ் மக்கள் 'சமுகநலன்' அக்கறையுடன் ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவோம்.**



பிரதம விருந்தினர்
திரு.ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)



வரவேற்புரை
சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை
(சைவபரிபாலனசபை செயலாளர்)



நாவலர் இவரே!
ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்
(சைவபரிபாலனசபை சமயப்-பிரசார அமைச்சர்)



## சைவ பரிபாலன சபையாரால் 16.11.2003 ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்

### கீழ்ப்பிரிவு

செல்வன் தெ. சிவரூபன் யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் — 1ஆம் இடம்
செல்வி லக்ஸா சுரேந்திரன் யா/இராமநாதன் கல்லூரி — 2ஆம் இடம்
செல்வி தர்சிகா தர்மசேகரம் யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் — 3ஆம் இடம்

### மத்தியபிரிவு

செல்வி தாரணி செல்வராசா கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் — 1ஆம் இடம்
செல்வன் யோகலிங்கம் சுதாகர் யா/யூனியன் கல்லூரி — 2ஆம் இடம்
செல்வி சிந்துஜா முத்துலிங்கம் யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் — 3ஆம் இடம்

### மேற்பிரிவு

செல்வி சுஜி லோகநாதன் யா/அருணோதயாக் கல்லூரி — 1ஆம் இடம்
செல்வி கஜானி அருட்பிரகாசம் யா/உடுவில் இராமநாதன் மகாவித்தியாலயம் — 2ஆம் இடம்
செல்வி ரமா குகநாதன் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி — 3ஆம் இடம்

### கட்டுரைப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்

செல்வி சசிகலா சந்திரன் கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் — 1ஆம் இடம்
செல்வி பிளண்டினா மகேந்திரன் யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி — 2ஆம் இடம்
செல்வி ஸ்ரீறஜிதா தியாகராசா யா/அருணோதயாக் கல்லூரி — 3ஆம் இடம்

பிரதமவிருந்தினர் கோப்பாய் ஆசிரியகலாசாலை அதிபர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி பரிசில் வழங்குகின்றார்.

முதலாம் பரிசு
தங்கப் பதக்கம்

இரண்டாம் பரிசு
வெள்ளிப் பதக்கம்

மூன்றாம் பரிசு
வெண்கலப் பதக்கம்

நாட்டின் பிரச்சினை காரணமாக போட்டிகளில் கலந்துகொள்ள முடியாதிருந்த வன்னி மாவட்ட மாணவர்கள் இவ்வருடம் கலந்துகொண்டனர்.



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்து சாதனம்
(HINDU ORGAN)
சுபானுவருஷம் புரட்டாசி - மார்கழி [28-12-2003]

# சைவத்தமிழ் பக்தி இயக்கம்

**பௌத்**தமதம் தூய தர்மமாகக் கடைப்பிடிக்கப் படவேண்டும். பௌத்தர்கள் சலுகைகளுக்காகவும் ஆசைகளுக்காகவும் மதம்மாறக்கூடாது என்று தீவிரமாகப் பிரச்சாரம் செய்தவர் கங் கொடவல சோம தோரோ. பௌத்தர்கள் பிற மதங்களுக்கு மதமாற்றம் செய் யப்படுவதை மிகமிக ஆவேசமாகக் கண்டித்து வந்தவர் சோமதேரோ. சிங்கள பௌத்தர்கள் என்ற எண்ணக்கருவை வேருன்றச் செய்து வந்தவர் சோம தேரோ. அவரது இறுதிக்கிரியைகளின் போது இலட்சக்கணக்கான மக்கள் குளறி அழுவதைக் காணமுடிந்தது. தனது மதம், மொழி என்பவற் றினை உயிராகக் கொண்டு உயிர்மூச்சு உள்ள வரை உத்தமனாக உயர்ந்தோனாக உய்விக்க வந்தவனாக சிங்கள பௌத்தமக்கள் உணர்வு பூர்வமாக உவந்தேற்றுக்கொண்டனர். மாணவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் என்று எல்லோருமே அவரது பிரிவைத் தாங்கமுடியாது துடித்துக் கதறியழுதனர். இத்தகைய மனவுறுதி கொண்ட சைவத் தமிழ்த் துறவிகள் ஈழத்திலே இன்றில்லையே? சுவாமி விபுலானந்தர், ஆறுமுகநாவலர் என்பதெல்லாம் வரலாற்றுப் பெயர்களாக எம்மிடம் காணப்படுகின்றன. எமது தாய்மொழி, எமது சைவம் என்று சிலிர்த்தெழுந்து களத்திலே சிலம்பமாட சிங்க சைவத்தமிழ் மகன் பிறந்துதான் வர வேண்டுமா? என்று சிந்தனை மேலோங்குகின்றது. எமது சைவத்தையும், சைவ மரபுகளையும், சைவ பண்டிகைகளையும் வளர்த்தெடுக்க இளந்தலைவர்கள் நிறையத் தேவைப்படுகின்றார்கள். போப்பாண்டவரோ, பேராயரோ, மகாதேரரோ வாயசைத்தவுடனே அதனைச் செய்துமுடிக்க இலட்சமோ இலட்சம் மக்கள் காத்திருக்கின்றனர். ஆனால் சைவத் தமிழ் மக்களிடையே எல்லோராலும் உவந்தேற்கப்பட்ட தலைவர்கள் இல்லையே? சோமதேரருக்கு சிங்கள மக்கள் நன்றியைக் காட்டியதுபோல் சைவமக்களும் தன்னலமற்ற சைவத் தலைவர்களுக்கு உறுதுணையாக துடித்தெழுந்து வருவார்களா? நிச்சயம் வருவார்கள்.

யாழ்ப்பாணத்தில் "விழிப்புணர்வுவாரம்" மிகவும் தீவிரமாகக் கொண்டாடப்பட்டதாக பத்திரிகைச் செய்திகள். எமது மண்ணிலே இத்தகைய பிரச்சாரத்திற்கு 'அவசரத்தேவை' ஏற்பட்டுவிட்டதே! இந்தப்பாடம் மிகவும் தேவையானது. எம்மினத்தின் பண்பாடு - கலாச்சாரம் என்பன என்ன கதிக்குள்ளாகப் போகின்றன? எமது சைவத்தமிழ் மக்கள் சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது "நான், எனது, எம்முடைய" என்ற குறுகிய எண்ண வட்டத்தைவிட்டு வெளியே வரவேண்டும். எமது தலைமுறை அடுத்த தலைமுறைக்கு நல்ல உதாரணமாக அமையவேண்டும். இன்றைய சமூகச் சீரழிவுகள் நாளைய தலைமுறையை நிறையப் பாதிக்கின்றன.

சக்திவாய்ந்த சைவத்தமிழ் பக்தி இயக்கம் தேவைப்படுகின்றது. பல்லவர் காலத்திலே நாயன்மார்களின் பக்தி இயக்கம் சிவபணியில் சிறப்படைந்தது போல் இன்றைய நூற்றாண்டில் சைவத் தமிழ் பக்தி இயக்கம் தேவைப்படுகின்றது. கிராமங்கள் தோறும், கோயில்கள் தோறும் பக்திப்பிரவாகம் பெருக்கெடுத்தோடவேண்டும். தமிழோடு - பண்ணோடு - சைவத்தமிழ்ப் பாடல்கள் - தோத்திரங்கள் சிறுவர்களால் பாடப்படவேண்டும். கோயில்கள்தான் இத்தொண்டிற்கு சிறந்தவை. கோயில்கள் என்றால் திருவிழாக்கள்தான் என்ற நிலை மாறி கலைவளர்க்கும் கோயில்களாக, அறம்வளர்க்கும் ஆலயங்களாக அறிவுதரும் கல்விச்சாலைகளாக எமது கோயில்கள் மாறவேண்டும். கிராமத்தில் தேவையறிந்து துயர் துடைக்கும் தேவாலயங்களாக கோயில் மாறினால்தான் எமக்கு பூச்சாண்டி காட்டும் "மதமாற்றம்" மறைந்துபோகும். சட்டம் மூலம் மதமாற்றத்தடை என்பதிலும் பார்க்க மத மாற்றமே ஏற்படாவண்ணம் சைவத்தமிழர்கள் சிறப்பாகச் செயற்படவேண்டும். ஏழ்மையால் ஏற்படும் தேவைகளை பெற்றுக்கொடுக்க நல்ல திட்டங்கள் தீட்டப்பெற்று நிறைவேற்றப்படவேண்டும். வெறும் மேடைப்பேச்சுக்களும், விழாக்களும் இவற்றினைச் செய்துதரமாட்டா என்பது வெள்ளிடைமலை. எனவே சைவர்கள் ஒன்றுபட்டு சமுக நலச் செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

எமது சைவத் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கு பாடசாலைகளே கேந்திர மையங்கள் என்பதை உணர்ந்து செயற்படச் சொன்னவர் எமது ஆறுமுக நாவலர். நாவலரின் நாவன்மை, நாவலரின் நற்சிந்தனை, நாவலரின் தமிழ்த்திறமை, நாவலரின் நன்நெறி - இவையெல்லாம் எமக்கு நல்ல பாடங்கள். நாவலரின் நன்நெறியில் நமது பிள்ளைகளை அழைத்துச் செல்லவேண்டியவர்கள் ஆசிரியர்கள். எனவே ஆசிரியப் பெருந்தகைகளை நாம் போற்றிப் பாதுகாத்து நடக்கவேண்டும். புதிய "ஆசிரிய சக்தி" உருவாக வேண்டுகின்றோம்.

# திருமணமாம் திருமணம்

சம்பிரதாயமுறைப்படி இந்து திருமணங்கள் நடைபெறுகின்றன. இந்த சடங்குகள் ஏன் செய்யப்படுகின்றன? நமது முன்னோர் செய்தனர் என்பதற்காக நாமும் செய்யவேண்டுமா? என்ற கேள்விகள் எழுகின்றன. மேலை நாட்டு அறிஞர் டேவிட் ஹியூம் பழக்கவழக்கங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வழிகாட்டிகள் என்று கூறியுள்ளார். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் "என் அகவாழ்வும் புறவாழ்வும் வாழ்கின்ற - வாழ்ந்து மறைந்தும் பேசப்படுகின்ற பலருடைய வாழ்க்கைகளைச் சார்ந்திருக்கின்றன..." என்று கூறியுள்ளார். சம்பிரதாயங்கள் அனைத்தும் எழுதப்படாத சட்டங்கள் போன்றவைதான். சம்பிரதாயங்கள் இடத்திற்கிடம் மாறுபடுகின்றன. ஆயினும், அவை சில பொதுத்தன்மைகள் பெற்றிருக்கின்றன. இந்துக்களின் திருமணங்களைச் சற்றுப் பார்ப்போம்.....

**மந்திரங்கள்**

சொற்கள் மந்திரமாதல் வேண்டும் என்று என்று பாரதி கூறியுள்ளார். மந்திரச் சொற்கள் மகிமை வாய்ந்தவை. மனத்தின் ஆழத்தில் பதிந்து அற்பும் செய்பவை.

**அரசாணி நடுதல்**

வேதகாலத்தில் இயற்கை வழிபாடு. நமது முன்னோர்களின் இயற்கை வழிபாடு. இவற்றின் வழிவழியாய் வந்திருக்கலாம்.

இந்தியாவில் ஐந்து சுமங்கலிப் பெண்கள் மண்ணெடுத்துவரவேண்டும். பால் ஊற்றவேண்டும். அரசாணிநட்டு அதற்கு கங்கணம் கட்டி மஞ்சள் துணியில் நவதானியங்களைக் கட்டி அரசாணியில் கட்டவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இம்முறை வேறுபடுகின்றது.

**குத்துவிளக்குகள்**

மணவறையில் இரு குத்துவிளக்குகள் ஐந்து முகங்களும் சுடர்விடும்படி ஏற்றவேண்டும். மணமக்கள் இருவரின் பஞ்சேந்திரியங்களும் இல்வாழ்வில் சுடர்விட்டுப் பிரகாசிக்கவேண்டும் என்பதை இது குறிக்கும்.

**பெற்றோர்வழிபாடு**

இது யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றதா?

மணமக்கள் பெற்றோருக்கு பாதபூஜை செய்யவேண்டும்.

**குரு**

ஞான வழிகாட்டியாகிய குரு முன்னின்று திருமணத்தை நடத்துகின்றார். குருவானவர் அங்கநியாசம் - கரநியாசம் என்ற சுத்திகளைச் செய்துவிட்டு, தன் ஆன்மா வில் உறைந்திருக்கும் இறைவனைத் தியானித்துவிட்டு "தெய்வமே! இத்திருமணத்தை நிறைவேற்றித் தருவது நீயேதான். உன்சார்பில் சம்பிரதாயச் சடங்குகளை மட்டுமே நான் செய்கின்றேன் இந்த செயற்பாட்டில் நீ உடனிருந்து அருள் புரியவேண்டும்", என்று வழிபட்ட பின் சடங்குகளைச் செய்யவேண்டும்.

**காப்புக்கட்டுதல்**

திருமணம் தடையின்றி நடைபெற தோஷங்கள் சகல இந்த சடங்கு. மந்திரக்காப்பு ஒரு இரட்சையாக இருந்து எந்த தீமையும் மணமக்களுக்கு வராமல் காக்கின்றது. அகல தெய்வ சக்திகளும் இங்கு வந்து இவர்கள் இல்லறதர்மத்தை ஏற்க அருளட்டும் என்றுமந்திரம் கூறப்படுகின்றது. ஒன்பது மடிப்பால் ஆன மஞ்சள் தடவிய நூலில மஞ்சளைக்கட்டி கங்கணம் அமைத்தார். தெய்வநாகமான வாசுகியாக அந்த இரட்சை கருதப்படுகின்றது. இந்தியாவில் "திரியம்பகம் யஜாமகே" எனும் மகாமந்திரத்தை பிராமணர் ஒத - மணமகனுக்கு தந்தையும், மணமகளுக்குத்தாயும் இதைக்கட்டி அதன் மீது திருநீற்றைப்பூசுவது வழக்கம். ஆனால் இங்கு பிராமணரே இதனைக் கட்டுவது வழக்கம்.

**பிள்ளையார் பூசனை**

காத்து அருளும் மகா கணபதியை வணங்கி மங்கலச்சடங்குகள் ஆரம்பமாகும்.

**கலச பூஜை**

கலசம் திருமகளின் திருக்கோலம். வாழ்வுக்கு வளம் தருபவள் திருமகள். அதனுள் நிறைந்திருக்கும் நீர் மகாவிஷ்ணு.

**நவநாயகர்பூசை**

வாழை இலையில் அரிசி பரப்பி நவகோள்களின் கட்டம் கீறி வணங்குவது வழமையாகும்.

**அக்னி - தேவர்களின் தூதன்**

அக்னி சகலதெய்வங்களுடைய திருமுகங்களாகக் கருதப்படுகின்றது. மருத்துவ குணங்களையுடைய சமித்துகளால் எரியும் அக்னியானது பல நன்மைகளை தருகின்றது.

**மாங்கல்ய பூசனை**

திருமாங்கல்யத்தில் திருமகளை வீற்றிருக்கச் செய்யும் மரபுகாணப்படுகின்றது. "நமது மனத்திலே தோன்றிய நல்லாசை நிறைவுற, உயர்ந்த மகிழ்ச்சி என்று நிலவ, தெளிவான வாக்கே உதிக்க, தெளிந்த உண்மையையே சித்தம் அறிய, வள்ளல் பசுக்களின் வளம் சிறக்க, வற்றாத அன்னம் இல்லத்தில் இருக்க, நற்புகழும், நல்லமும் மேவ, திருமகளே! திருவருள் பாலிப்பாய்" என்பதுதான் மாங்கல்ய மந்திரத்தின் பொருளாகும்.

**சபையினர் ஆசி**

உற்றார் உறவினர் நண்பர்களின் நல்லாசிபெற - திருமாங்கல்யத்தைத் தொட்டு நல்வாழ்த்துக் கூற திருமாங்கல்யம் எடுத்துச் செல்லப்படுவது மரபாகும்.

**திருமங்கலநாண்பூட்டுதல்**

"மாங்கல்யம் தந்துனானேன மமஜீவன ஹேதுனா, கண்டே பத்னாமி சுபகேத்வம் ஜீவசரதம்சதம்"

இதனுடைய கருத்து:- நான் சிரஞ்சீவியாக இருப்பதற்குக் காரணமான இந்த திருமாங்கல்யத்தை உன் கழுத்திலே கட்டுகிறேன். ஓ! பாக்கிவதியே நீயும் நூற்றாண்டு ஜீவித்திரு..."

**கரம்பற்றுதல்**

பாணிக்கிரஹணம். "அக்னி சாட்சியாக உள்ளன இன்று மணந்து கரம்பற்றுகிறேன். நீயும் நானும் முதுமைப் பருவம் அடைந்தாலும் கூட, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாது இணைந்திருப்போம்.

**சப்தபதி**

கரம்பற்றிய மணமகன் மணமகளின் வலது காலை கையால் பிடித்து ஏழுஅடிகள் எடுத்து வைத்து அழைத்துவரும் வழக்கமும் இருக்கின்றது.

- உலகத்தை இரட்சிக்கும் மகாவிஷ்ணு நமக்கு நிறைய அன்னம் அருள உன்னுடன் வரட்டும்.
- திருமகள் தொடர்ந்து வரட்டும்.
- இல்லத்தில் நல்ல கருமங்களைச் செய்ய இறைவன் பின் தொடரட்டும்.
- சுகத்தை அளிக்கட்டும்.
- பசு, செல்வம் அளிக்கட்டும்.
- பருவகால நலங்கள் நன்மையை அருளட்டும்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# தனம் தரும்.... தளர்வறியா மனந்தரும்....

உலக வாழ்க்கையில் நமது தேவைகளுக்கு அளவே யில்லை. மனிதன் ஆசைகளின் மொத்த உருவாகிறான். நம்மையும் மீறிய சக்தியினால் நாம் வேண்டியவைகளைப் பெறலாம் என்பதை உணர்ந்ததின் விளைவுதான் இறை வழிபாடு முறைகளாகும்.

துன்பங்களில் இருந்து விடுபட்டு இன்பத்தை அடைய, மனதை ஒருமுகப்படுத்தி ஈசனை வழிபடுகிறோம். பற்பல விஷயங்களுக்குப் பலவிதமான பூஜாமுறைகள் ஏற்படுத்தப்பட்டு, ஆண்டாண்டு காலமாய் கோடானு கோடி மக்கள் அதனால் பயனடைந்திருக்கிறார்கள். நமது மனதில் நம்பிக்கை ஏற்பட இம் மாதிரியான பூஜைகளுடன் ஏதாகிலும் ஓர் புராணக் கதை ஒன்றியிருப்பதைக் காணலாம்.

ஒரு முறை திருக்கைலாயத்தில், பார்வதியும் பரமேஸ்வரனும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் தேவி ஈசனை நோக்கி, "சுவாமி! ஆட்டத்தில் நான் ஜெயித்துவிட்டேன்!" என்று உற்சாகத்தோடு கூறினாள். ஆனால் சிவபெருமான் அதை ஏற்காமல், "இல்லை தேவி! நானல்லவோ ஜெயித்துள்ளேன்!' என்று கூறினார்.

"நான்தான் ஜெயித்தேன்!" - "நான்தான் ஜெயித்தேன்!" என்று இருவரிடையே வாக்குவாதம் முற்றியது.



சரி! வாதத்தைத் தீர்த்துவைக்க வேண்டுமல்லவா?

எந்தவித பேதமுமின்றி, சதா உண்மையைக் கூறும் கணதேவதையான சித்திரநேமியை நடுவராக ஈசன் அழைக்கிறார். அவன் ஆட்டத்தை நன்றாகக் கவனித்தபின்பு, "ஈசனே வெற்றிபெற்றுள்ளார்!" என்று கூறினான் அன்னை மகா தேவிக்கு கடுமையான கோபம் ஏற்பட்டு, சித்திநெமியைப் பார்த்து, "பொய்! நீ சொல்வதில் சிறிதுகூட உண்மையில்லை. அதனால் நீ குஷ்டரோகியாகி, ஒளி இழந்து தவிப்பாயாக!" என்று வெகுண்டு சபித்துவிடுகிறாள்.

தேவியின் கோபம் அவமானத்தின் பிரதிபலிப்பு என்பதைப் புரிந்துகொண்டார் சர்வேஸ்வரன்.

"பார்வதி! சித்திரநேமிக்குப் பொய் என்றால் என்னவென்றே தெரியாது. அதனால் அவன் பொய்யான தீர்ப்பைக் கூறிட அவசியமேயில்லை. பாவம்! அவனுக்கு நீ இட்ட சாபத்தை அருள்கூர்ந்து அகற்றுவாயாக!" என்று சித்திரநேமிக்குப் பரிந்து பேசினார்.

மனமிரங்கிய பர்வதிதேவி சித்திர நேமியை நோக்கி, "எப்பொழுது தேவகன்னிகைகள் தடாக தீர்த்தத்தில் புண்ணி யமான விரதம் ஒன்றை அனுஷ்டிக்கிறார்களோ, அதைக் காணும் மாத்திரத்திலேயே உனது சாபம் நீங்கப் பெறும்!" என்று அருளினாள்.

குஷ்டரோகியாக சித்திரநேமி, ஒரு தடாகத்தின் அருகில் வாசம் செய்யத் தொடங்கினான்.

ஒருநாள் சூரியன் கடகத்தில் இருக்கும்போது, சிராவண மாதம் சுக்ல பக்ஷத்தில், வெள்ளிக்கிழமை யன்று சில தேவலோகப் பெண்கள் அந்தத் தடாகத்தில் பூஜையொன்று நடாத்திட ஆயத்தமாவதைக் கண்டான் சித்திரநேமி. அவனுக்குள் பரம சந்தோஷம். 'ஒருகால் இந்த பூஜை பார்வதி தேவி கூறிய பூஜையாக இருந்தால் நாம் வெகுவிரைவில் இக் குஷ்டரோகத்திலிருந்து விடுபட்டு விடுவோமல்லவா? என்று நினைத்து, அந்த தேவபதிவிரதைப் பெண்களை அணுகினான்.


"தேவியரே! நீங்கள் செய்யும் பூஜை என்ன?' என்று வினவ, அவர்கள் அதை விளக்கமாகக் கூறினர்.

அந்த பூஜை மகாலட்சுமியை நோக்கி எடுத்துக்கொள்ளும் விரதம் என்றும், கோரும் வரங்கள் யாவற்றையும் அளிக்கவல்லது என்றும் வலியுறுத்திக் கூறினார்கள்.

"வரம் அளிக்கும் லட்சுமி தேவியைப் பூஜிப்பதற்கு முன்னால், அவளைப் பூஜித்திடும்இடத்தைப் பசுஞ்சாணத்தினால் மெழுகி, அலங்காரத் தோரணங்கள் - கோலங்கள் முதலியவை கொண்டு அழகு செய்யவேண்டும். கிழக்குத் திக்கில் - முக்கியமாக ஈசானிய மூலையில், நெல்லைப் பரப்பவேண்டும். அதன் மீது ஒரு தாம்பாளத்தில் அரிசியைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# நீதான் சிறந்த மாணவன்



"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

# தமிழை மணந்த தவமுனிவன்

மா.க.ஈழவேந்தன்

எம் மாணிக்கவாசகப் பெருந்தகை முற்றும் துறந்த முனிவர் மண், பெண், பொன் என்ற ஆசைகள் அனைத்தையும் அறவே துறந்தவர். ஆனால் அவரால் தமிழை துறக்க முடியவில்லை. அதனாற்றான் "உயர் மதிற் கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்" என்று தமிழின் பெருமையை திருக்கோவையாரில் திறம்பட எடுத்தியம்புகின்றார். அத்துடன் இறைவனை விழித்துப் பாடுகையில் 'தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை' என்று தான் பிறந்த தமிழ் வளர்த்த பாண்டி நாட்டை தன்னையே மறந்த நிலையில் பெருமித உணர்ச்சியுடனும் பேருவகையுடனும் போற்றிப் புகழ்கிறார். அதுமட்டுமல்ல எந்நாட்டவருக்கும் இறைவனாக சிவன் விளங்கினாலும் அவன் தென்னாட்டுச் சிவன் என்பதை "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று அவர் பாடிய பாடல்கள் அவருக்கு தான் பேசிய மொழியில் இருந்த தனியாத காதலையும் தான் வாழ்ந்த நாட்டில் இருந்த தனிப்பற்றினையும் தகைசான்ற முறையில் எடுத்துக் காட்டுகிறது.

### மும்மலத்தின் முடிச்சறுக்கும் திருவெம்பாவை

"பாவைபாடிய வாயால் கோவைபாடுக" என மங்கை மணவாளனே மணிவாசகரை வேண்டியது திருவாசகத்தில் திருவெம்பாவை தனிச் சிறப்புடன் விளங்குகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. 51 பதிகங்களில் ஒரு பதிகமாக விளங்கும் திருவெம்பாவை இருபது பாடல்களின் உள்ளடக்கமாய் விளங்குகிறது. இப் பதிகம் இறையருள் தோய்ந்த இன்பத் தமிழ் ஊற்றாகப் பெருக்கெடுக்கிறது. 'நான்' என்ற செருக்கில் அழுந்தி, ஊழ்வினையால் உறுத்தப்பட்டு, நிலையற்ற இவ்வுலகை நிலையானது என்று மயங்கும் எம் அறிவற்ற நிலையாகிய மூன்று நிலைகளில் இருந்து நீங்க - ஆம்! வேறு சொற்களில் விளம்பின் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலப் பிணிப்பிலிருந்து மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் 'கன்னிகள்' ஆகிய ஆன்மாக்களைத் துயிலெழுப்பி, அம்மை அப்னாய் - சிவசக்தியாய் விளங்கும் இறையருள் என்ற இன்பப் பொய்கையில் மூழ்கி தோற்றமும் ஒடுக்கமும் அற்ற - முதலும் முடிவும் அற்ற - ஆதியும் அந்தமும் அற்ற அரும் பெரும் ஒளியில் - அருட்சோதியில் எம்மை இரண்டறக் கலக்கச் செய்கின்ற அருட்பெரும் அருந்தமிழ் ஊற்றே மணிவாசகரின் பாடல்கள். கற்றோருக்கும் கல்லா மற்றோர்க்கும் களிப்பருளும் களிப்பாய் விளங்கி கடல் கடந்த நாடுகளெங்கும் பரவி 'தமிழ் மந்திரம்' என உலகத்தார் உவந்து போற்றும் பேற்றினைப் பெற்றுள்ளது. இப்பாடல்கள் சயாம் நாட்டில் மன்னரின் முடிசூட்டு விழாவில் 'லோ-ஜின்-ஜா (Loginga)' என்ற திருவிழாக்காலத்திலும் 'லோரி பாவாய்' என்ற பெயருடன் பாடப்படுகிறது. 'லோரிபாவாய்' என்பது 'எம்பாவாய்' என்ற தூய தமிழ்ப் பெயரின் திரிபு என்பது ஈண்டு வலியுறுத்தற்குரியது.

### சொல்லிய பாட்டின் பொருள் உணர செந்தமிழிற் செப்பிடுக

'வேதம் ஓதின் விழிநீர் பெருகுவதில்லை எமக்கு, ஆனால் அங்கொரு கால் திருவாசகம் ஓதின் எம்மை அறியாமலே கண்களில் நீர் பெருகுகிறது.' காரணம் முன்னையது எமக்கு புரியாத வடமொழியில் எழுதப்பட்டிருப்பது. பின்னையது எமக்குப் புரியும் உள்ளமுருகும் உயர் தமிழில் எழுதப்பட்டிருப்பது. உள்ளம் தொடும் - புரியும் மொழியில் வழிபடும்போது தான் இறையின் இனிய இயல்பை யாம் உள்ளத்தில் உய்த்துணரத் தக்கதாய் இருக்கிறது. அதனாற் தான் "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல வேண்டும்" என்று மணிவாசகர் வேண்டுகிறார். வேறு சொற்களில் விளம்பின் இன்பத் தமிழால் இறைவனைப் பாடி அன்பைப் பெருக்க வேண்டும் என்பதே மணிவாசகர் உள்ளக் கிடக்கை என்பதை நாம் உணரத்தக்கதாய் இருக்கிறது. ஏன் திருவாதவூரரின் தித்திக்கும் திருவாசகத்தின் உள்ளடங்கியுள்ள "போற்றித் திருவகவலை" விட இறைவனை வழிபட - அருச்சனை செய்ய வேறு சிறப்பு வழிபாட்டு முறை உண்டோ என யான் அறியேன்.

### மணிவாசகர் வழியில் தெ. பொ. மீ.

சொல்லிய பாட்டின் பொருளை உணர்த்தி உள்ளம் உருக்கும் தன்மை உயர் தமிழுக்கே உண்டென்று மணிவாசகர் கருத்துக்கு வழிமொழி கூறுவதுபோல் பன் மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தன் பன்மொழி அறிவின் துணைகொண்டு தமிழின் தகைசான்ற தன்மையை - அதனின் குழைவைப் பின்வருமாறு கூறுவது எம்மையெல்லாம் உணர்ச்சியின் உச்ச நிலைக்கு அழைத்துச் செல்கிறது. 'இலத்தீன் மொழி சட்டத்திற்கும் ஆங்கிலம், செர்மன், பிரஞ்சு முதலியன அறிவியலுக்கும், சோவியத் மொழிகள் ஏகெசுவரவாதத்திற்கும், வடமொழி இலக்கணம் மெய்ப்பொருள் முதலியன வற்றிற்கும் தமிழ் ஆன்மிக கிளர்ச்சிக்கும் மிக வாய்ப்பான மொழிகள், இம்மொழிகளை ஆழக்கற்றால் ஒழிய இவற்றை உணர முடியாது. இவ்வாறே தமிழ் அருளாளர்களது தமிழ்க் கவிதைகளைப் பயிலுங்கால் நாம் அவர்கள் கண்ட அனுபவங்களை எய்துகிறோம். இறைவனோடு இரண்டறக் கலந்த அவர்களுடைய இனிய அருட்பேறுகளை உணருகிறோம். "If the reality of law cannot be appreciated without a study of Latin. If science cannot be fathomed without a study of English, French and German; If monotheism cannot be understood without a study of Soviet languages, if philosophy and grammar cannot be admired without a study of Sanskrit, the depth of the literature of hymns or the soul stirring songs cannot be plumbed except through Tamil. When we read the poems of the Tamil saints, thanks to their poetry we experience perhaps as it were in a dream their mystic communion with god."

### நில்லா உலகில் நீடு புகழை நிலைநாட்ட

இதனாற்றான் "நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்லோம்" என்று கூறி பற்றற்றான் பற்றினைப் பற்றி உலகப் பற்றுக்கள் அனைத்தையும் துறந்த தூய துறவியான மணிமொழியாளராற் (மணிவாசகர்) கூட தன் உள்ளத்தில் ஊற்றெடுத்த உயிரனைய கருத்துக்களுக்கு உருவமும் வடிவமும் கொடுத்த வளம் செறிந்த தமிழையும், தன்னைத் தோற்றுவித்து தன் உலகளந்த உயர் சிந்தனைகளுக்கு நிலைக்களமாய் - வற்றாத ஊற்றாய் விளங்கிய தென் பாண்டி நாட்டையும் தென்னகமாம் தமிழகத்தையும் அவரால் மறக்க நினைத்தாலும் மறக்க முடியவில்லை. தேன் கலந்த வாசகம் தந்த மாணிக்கவாசகரின் நிலையே இது வாயிருக்கும்போது தமிழ் மரபு தோன்றித் தமிழ்த் தாய்மாரின் நெஞ்சை அள்ளும் கொஞ்சும் தமிழ்த் தாலாட்டில்

(13ஆம் பக்கம் பார்க்க)



THE HINDU ORGAN
DECEMBER 2003

# Biography of Arumuga Navalar

Written by: M.K Eelaventhan

### Eelam's Contribution to Tamil

From time immemorial, Tamil Nadu and Tamil Eelam have contributed their share to the enrichment of Tamil language, culture and way of life. Eelaththu Pootham Devanar from Sangam age and other eminent poets, writers and intellectuals like Nallur Arasa-kesari, Sababathy Navalar, Sankara Pandithar Pulolyoor Kathiravet pillai, C.V.Thamotharam Pillai, Chunnakam Kumarasamy Pulavar, Navaliyoor Somasun dera Pulavar, Nallur Gnanapragasar, Vip ulanantha Adigal of Batti caloa, Kanaga sun deram of Trincomalee, Pandith amani Kana pathipillai, and Father Thaninayagam have in their own way enriched the Tamil language and literature. It can be safely said that Tamil Eelam has contributed substantially towards the promotion of Tamil language, literature, architecture, science, technology and cultural growth of Tamils.

### Navalar Awakened the Tamil Consciousness

The early part of the19th century was a dark period for the Eelam Tamils. Under alien British rule there was the danger of the Tamils losing their language, culture their way of life and their religious beliefs. During this crucial period, Arumuga Navalar, the champion of Saiv aism ( Hinduism ) and the pioncer of Tamil prose appeared on the scene. The Christian missionaries were converting the Tamils to Christianity by providing education, employment and concessions. There was a real danger of the preponderant majority of the Tamils circumbing to these inducements and attrations, and eventually, losing their Tamil and Saiva identity. It was left to Arumuga Navalar to awaken the consciousness of the Tamils and to make them aware of this drift.

### Navalar's Translation of the Bible

In this context it must be emphasized that though Arumuga Navalar fought against the conversion of the Tamils to Christianity, he was not a religious fanatic. He was a good friend of Rev Percival who was a Wesleyan missionary teacher at Jaffna Central College. When Rev. Percival requested Navalar to translate the Bible into Tamil, Navalar happily undertook the task. Even the Tamil scholars of Madras of the 19th century acclaimed his effort as the best translation. This aspect of his life revcaled not only his command of English and Tamil but also proclaimed to the world his broad thinking and religious tolerance.

### Birth and Early Cluldheed Child Hood

Arumuga Navalar was born in Nallur, the once glorious capital of Tamil Eelam on 22nd December 1822, and passed away at the age of 57 on December 5th 1879. His father

Kandhar and mother Sivakamy were decply religious and devout and Navalar imbibed those qualities. Even as a teenager he mastered Tamil, Sanskrit and English, and made an indepth study of Tamil grammar, lanaguage, literature and religious wor ks. It is on record that at a very young age he completed a drama script begun by his father, who passed away without completing it, Scholars who had gone through this work were full of praise for the originality he showed as a playwright.

### Eminent Writer and Silver-Teangued Orator

Arumuga Navalar was a profilic writer and a silver 'tongued' orator. He was a pioneer in the field of prose-writing. In the 19th century the Tamil prose style was in its infancy. Navalar appeared on the Tamil literacy firmament and brought out prose works which are cherished by Tamil scholars as outstanding achievements. 'Parithima Kalagnar' later described Navalar as 'Vasana Nadai Kaivantha Vallalar'(the best exponent of Tamil prose).

### High Moral Reclitude

Today the writings and pronouncements of public men have little or nothing to do with their private life. But the life of Arumuga Navalar was in total conformity with everything he said and wrote. He maintained a high moral standard in both private and public life. Even his opponents respected him.

### Thiru Vi.Ka's Tribute to Navalar

In his short life convering 57 years he published around 75 books. They covered his original writings and his commentaries on ancient classics. C.V.Thamotharampilliai and later U.V.Swaminatha Iyer followed the footsteps of Navalar in this field of publishing ancient classics. One eminent Tamil scholar Thiru Vi.Ka said "In the field of publishing old manuscripts Navalar laid the foundation, C.V.Thamotharampilliai built the walls and U.V.Swaminatha Iyer beautifully roofed it".

### Perfection in Printing

Printing was in cmbryonic stage in the early 19th century. During this difficult period Navalar brought out quality printing to the praise of his readers. This shows clearly his desire for perfection in all his ventures.

### Philanthropist at Heart

He was a philanthropist at heart. In a moving letter to his elder brother he quotes Mark Anthony, "I have lost everything except what I have givien away" He passed on all he received towards his passionate objectives of education, publication and propaganda for the revival of the lost heritage of the Tamils.

### Champion of Hinduism

Tamil language and Saiva ideals were very dear to his heart. Throughout his career he championed the cause of Hinduism. Sir Muthucumarasamy said of Navalar: " He is the Hindu of Hindus. He is one of those orientalists who can measure sword with even such a giant as my honourable friend the Queen's Advocate Hon. Mr.R.Cayley in any argument. He has a following which cannot be despised". Sir Ponnambalam Ramanathan said " We have lost the champion reformer of Hindus" at the demise of Navalar in 1879.

### Posterity will Remember Him

124 years have rolled by after the passing away Arumuga Navalar but his memory is still cherished by all the Tamils throughout the world and especially by the Eelam Tamils. The Tamils are eternally indebted to Navalar, and posterity will remember him with gratitude.

Courtesy :
**Tamil Chudar (1996 )-Sydney.**

# மாதங்களில் நான் மார்கழி


சித்திரை தொடங்கி பங்குனி வரை அமைந்த பன்னிரண்டு மாதங்களில் ஒன் பதாவது மாதம் மார்கழி. சூரியன் இந்தக் காலத்தில் தனு ராசியில் சஞ் சரிப்பதால் இதனை 'தனுர்மாஸம்' என்கி றோம். சாதாரணமாக இந்த மாதத்தைச் சூன்ய மாதம் என்று தள்ளி வைத்து விடுவார்கள். இம்மாதத்தில் திருமணங் கள் நடத்துவதில்லை. புதுவீடு குடிபோவ தில்லை. புதிய தொழில் தொடங்குவ தில்லை. ஆனால், இந்த மாதத்தைத் தான். எல்லா மாதங்களிலும் உயர்ந்த தாகவும், புனிதமானதாகவும் சாத்திரங் கள் கூறு கின்றன. 'மாதங்களில் நான் மார்கழி' என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணன் குருசேஷத் திரத்தில் அர்ஜுனனுக்கு உபதேசித்த கீதையில் குறிப்பிடுகிறார். இந்த முரண்பாடு ஏன்? புனிதமான ஒரு மாதத்தை சூன்யமாதம் என்று ஏன் ஒதுக்கவேண்டும்?

சூரியன் உதயமாகும் பன்னிரண்டு ராசிகளில் தனுராசி ஒரு சிறப்பான ராசி. தனுசு என்றால் 'வில்' என்று பொருள். அந்த ராசியின் சின்னம் வில். அது வீரத்தை மட்டுமின்றி தர்மத்திற்கு வளைந்து கொடுத்து வாழும் விவேகத் தையும் குறிக்கும் சின்னம். ஜோதிட சாஸ்திரப்படி தனுர் ராசியின் அதிபதி குரு அல்லது பிரகஸ்பதி. ஞானத்திற் குரிய கிரகம் ஆளும் ராசி அது. ஒழுக்க நெறியில் உடலையும், உள்ளத்தையும் பழக்கப்படுத்திக் கொள்ள பண்பட்ட பயிற்சி தேவை. அதற்குரிய காலம் சூரியன் தனுர் ராசியில் சஞ்சரிக்கும் காலம்.

மார்கழி மாதத்தில் இரண்டு புனித மான பண்டிகை நாட்கள் வருகின்றன. வைகுண்டவாஸன் ஸ்ரீமன் நாராயண னைப் போற்றிப் பணிந்து உய்ய வைகுண்ட ஏகாதசி கைலாசபதியான ஸ்ரீபரமேஸ்வ ரனை வழிபட்டு மகிழ திருவாதிரை நன்னாள்.

சைவத்தையும் - வைணவத்தையும் ஒருமைப்படுத்தி, இரு புனித நாட்களை தன்னுள்ளே கொண்ட மாதம் மார்கழி. மற்ற மாதங்களில் வரும் பண்டிகைகளுக் கெல்லாம் சம்பிரதாயங்கள் அதிகம். சடங்குகள் அதிகம் செலவும் அதிகம். ஆனால், மார்கழி மாதப் பண்டிகை இரண்டுமே உபவாஸ பண்டிகைகள்தான். முழுப்பட்டினி இருந்து, அல்லது சாத் விக உணவு சிறிதளவு உண்டு, பக வானைத் தரிசனம் செய்து தியானித்து மன அமைதி பெறும் செலவில்லாத பண்டிகைகள் இவை.

உடலையும் உள்ளத்தையும் இறை வனிடத்தில் ஒருமுகப்படுத்தி எளிய வழிபாடுகள் செய்து மனத்தூய்மை யையும் ஆன்மீக அமைதியையும் பெறு வதற்காக அமைந்த மாதம் 'மார்கழி!'. இறைவன் திருவடிகளைப் பற்றியே சிந்தித்து தவம் புரிய ஒரு புனித மாதத்தை ஒதுக்கி, அப்போது மற்றப் பிரச்சினைகள் குறுக்கிடாவண்ணம் அவற்றை ஒதுக்கிவைத்தனர் ஆன்றோர் கள். ஆனால், பாவம் மார்கழி! மங்கல காரியங்கள் செய்ய லாயக்கற்ற சூன்ய மாதம் என்று பழிஏற்று நிற்கிறது!



அதிகாலையில் துயிலெழுந்து, நன்னீராடி, கண்ணனைத் துதிசெய்ய ஆண்டாள் தந்த திருப்பாவையும், சிவனை வழிபட திருவெம்பாவையும் பாடி தூய பக்தியோடு இறைவனை வழி படும் தூய நாட்களைக் கொண்டது மார் கழி. ஒவ்வொரு வீட்டிலும் அதிகாலை நான்கு மணிக்கே பெண்கள் எழுந்து, பிரம்ம முகூர்த்தவேளையில் கடும் குளி ரையும் பொருட்படுத்தாமல் வாசல் தெளித்து, கோலமிட்டு, பூசணி மலர் களை அலங்காரமாக வைத்து, நீராடிய பின் வழிபாட்டைத் தொடங்கி நாளை ஆரம்பித்தால், ஆரோக்கியமும் செல் வமும் கொழிக்கும். அமைதியும், சாந் தியும் நிலவும். நல்ல பழக்கவழக்கங் களை ஏற்படுத்திக்கொள்ள இது ஒரு பயிற்சியாக அமையும் என்றெல்லாம் நம் பெரியவர்கள் சொல்லி வைத்தி ருக்கிறார்கள். குறிப்பாக தை மாதத் தில் மணமாகப் போகும் பெண்கள் மார்கழி மாதம் நோன்பு நோற்று நல்ல பழக்கவழக்கங்களை ஏற்றுக் கொள்வதால் புகுந்த வீட்டிற்குச் சென்று புகழடைய வும், பிறந்த வீட்டிற்கு பெருமைதேடித் தரவும் மார்கழி மாத வழிபாடு அடி கோலுகிறது.

மாரிகாலம் முடிந்து குளிர்காலம் மார்கழியில் அமைகிறது. பனிபடர்ந்த அதிகாலை நேரம். பற்கள் படபடவென அடிக்கும் குளிர். நன்றாகப் போர்த்திப் படுத்துக் கொண்டால் அமைதியான நித்திரை செய்ய அருமையான வேளை! அந்த நேரத்தில் எழுந்து, குளித்துவிட்டு, பஜனைப் பாடல்களைப் பாடிக்கொண்டு வீதிவழியே வரும் சம்பிரதாயத்தை இந்து சமயம் ஏற்படுத்தியிருக்கிறது. 'இது பகுத்தறிவுக்குப் பொருத்தமானதாகப் படவில்லை. கடுங்கோடை மாதங்களான சித்திரை வைகாசியில் இந்த சம்பிர தாயத்தை வைத்துக் கொண்டு மார்கழி மாதம் அதிகாலை நேரத்தை ஓய்வுக் காக ஒதுக்கியிருக்கக்கூடாதா நம் முன் னோர்கள்?' என்றுகூட சிலர் சிந்திப்ப துண்டு. ஆன்றோர்கள் வகுத்த வழிபாட்டு முறைகள் சாஸ்திர ரீதியாக மட்டுமின்றி விஞ்ஞானபூர்வமாகவும் பயன்தரத்தக்க வகையில்தான் உள்ளது. சமய வழி பாட்டுமுறைகளை ஆன்மாவின் பொருட்டு மட்டுமன்றி ஆரோக்யமான உடல் உண் டாவதற்கும், அமைதியான வாழ்க்கை அமைவதற்காகவுமே வகுத்தனர் ஆன் றோர்கள்.

ஒவ்வொருநாளும் அதிகாலை நேரத் தில் அதாவது காலை (4மணி முதல் 6 மணிவரை) காற்றிலுள்ள பிராண வாயு (ஆக்ஸிஜன்) வலுவான தூய நிலையில் ($O_3$) என்று விஞ்ஞானிகள் குறிப்பிடும் ஓஜோன் (Ozone) என்ற வடிவில், பூமியை ஒட்டிய காற்று மண்ட லத்தில் அடர்த்தியாக வியாபித்திருக் கும். ஓஜோன் (Ozone) என்பது பிராண வாயுதான். ஆனால், இதை துரிதமா கச் செயல்படும் தூய பிராணவாயு (Nascent Oxygen) எனலாம். மனிதன் உயர் வாழ்வதற்கும், உடல் உறுப்புக் கள் செவ்வனே செயல்படவும், ரத்தம் சுத்தமடையவும், நோய்களில் இருந்து பாதுகாக்கவும் தூய்மையான பிராண வாயு மிகவும் அதிகளவில் தேவை. கார்களும், பஸ்களும், ரயில்களும், தொழிற்சாலைப் புகைபோக்கிகளும் காற்று மண்டலத்தை வியாபித்து தூய் மையைப் போக்கியுள்ள இந்நாட்களில் மற்ற நேரங்களில் நல்ல அக்ஸிஜன் கிடைப்பது அரிது. எனவே, அதிகாலை யில் கிடைக்கும் இந்த ஓஜோன் என் னும் தூயு பிராணவாயு தற்கால வாழ்க் கையில் ஒரு வரப்பிரசாதம் என்று கூடக்

(13ஆம் பக்கம் பார்க்க)

# அன்பே கடவுள்!



'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது சங்க காலத்துப் புலவரான அவ்வைப் பாட்டியின் வாக்கு. தாயையும் தந்தையையும் தெய்வத்திற்கு சமமாக எண்ணி மரியாதை செலுத்தவேண்டும் என்பது இந்த வாக்கின் பொருள். தெய்வத்திற்குச் சமமாக என்றால் தெய்வத்தைப் பற்றி முதலில் அறிந்துகொள்ள வேண்டும் அல்லவா? அதனால்தான், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று அடுத்த வாக்கியம் அமைந்துள்ளது. 'ஆலயம் இருந்தால்தானே தொழ முடியும். எங்கள் ஊரில் ஆலயம் இல்லையே? என்ன செய்வது? என்று கேட்டால்? அதற்காக கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம், என்று சொல்லி விட்டார்கள். எனவே ஊர் என்று இருந்தால் அதற்குக் கோயில் என்பது எவ்வளவு முக்கியம் என்பது தெரிகிறது.

கோயில் என்பது வழிபாட்டுக்கு மட்டுமல்ல. கோயில், குளம், பூந்தோட்டம் என்ற அந்தச் சுற்றுச் சூழலே மனசுக்கு அமைதியையும் சந்தோஷத்தையும் கொடுக்கக் கூடியது. குளத்தில் புனித நீராடி, தோட்டத்தில் மலர்களைக் கொய்து எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவதென்பது தொன்று தொட்டு வந்த பழக்கம். இப்படிச் சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்கள் அமைந்து விடுகின்றன. ஆரம்பப் பள்ளியிலேயே அறநெறிகளையும் நீதிகளையும் தாய்மொழியில் போதிக்கும் நல்ல பழக்கம் இருந்து வந்தது. இது ஆங்கில போதனையால் நம் பண்பாட்டுக் கல்வி மறைந்துவிட்டது. அதன் விளைவை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். குழந்தைகள் பெரியவர்களானதும் தீய செயலில் இறங்குவதற்கும் குற்றம் புரிவதற்கும் இப்போதெல்லாம் அஞ்சுவதே இல்லை.

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்று கல்வியைப் போதிக்கும் ஆசானைத் தெய்வமாகப் பாவிக்கச் சொல்கிறது. ஆனால் இன்று அதற்கு நேர்மாறாக மாணவர்கள் நடந்து கொள்கிறார்கள். எல்லாவற்றுக்கும் நம் பண்பாட்டுச் சீர்குலைவுதான் காரணம்.

அன்னைதான் முதல் ஆசான். அவள் தான் அப்பா யார் என்று காண்பித்துக் கொடுக்கிறாள். அப்பாவைப் பார் அப்பாவை வணங்கு என்று கற்றுக் கொடுக்கிறாள். பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி நம்மை வளர்க்கும் தாய்க்குச் சமமாக வேறு யார் இருக்கமுடியும்? அன்னைக்கு நிகராக - கோமாதா, வேதமாதா, தேசமாதா, ஜகந்மாதா என்றெல்லாம் கூறுகிறோம்.

தாய்ப்பால் கிடைக்காத சமயத்தில் பசுவின் பால்தான் நம்மை வளர்க்கிறது. எனவே பசுவையும் தாயாகப் போற்றுகிறோம். புது வீடு கட்டி, குடி புகும் போதும் சுப காரியங்களிலும் முதலில் கோ பூஜை, பசுமாட்டுக்குப் பூஜை செய்வது பழக்கத்தில் உள்ளது. பசு மிகவும் புனிதமானது. அதன் கழிவுப் பொருள் கூட - சாணி, சிறுநீர் மிகவும் சுத்தமானது. மற்றவற்றையும் சுத்தப் படுத்தும். தன்மை வாய்ந்தது. சாப்பிட்ட எச்சில் இடத்தைச் சாணி போட்டுச் சுத்தம் செய்கிறோம். அதனால் நோய்க் கிருமிகள் உள்ளே வராமல் தடுக்கப்படுவதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். பசும் பால், பசும்தயிர், பசும் நெய் எல்லாம் கோயிலில் சுமாவி அபிஷேகத்துக்குப் பயன்படுகின்றன. வேள்விகளுக்கும் முக்கியமாகப் பசு நெய்யை உபயோகிக்கிறோம்.

உபநயனம், விவாஹம் போன்ற விழாக்களில் உடல் சுத்திக்காக முதலில் பஞ்ச கவ்யம், பசுவின் ஐந்து திரவியங்கள் பால், தயிர், நெய், சாணி, சிறுநீர் ஐந்தையும் வேதமந்திரங்களைச் சொல்லிக் கலந்து சாப்பிடக் கொடுப்பார்கள். ஆயுள்வேத வைத்தியத்துக்கு இந்த ஐந்தும் உபயோகமாகின்றன. சில மருந்துகளை - சூர்ணங்களை பாலில் அல்லது தயிரில் கலந்து சாப்பிடச் சொல்வார்கள். சில சூர்ணங்களை நெய்யில் குழைத்துச் சாப்பிடுவார்கள். சாணி ஒத்தடம் கொடுக்க உதவுகிறது. சிறுநீர் சில நோய்கள் தீர மருந்தாகச் சாப்பிடுவதும் உண்டு.

கோதூளிலக்னம் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது. விவாகம் போன்ற சுபகாரியங்களுக்கு லக்னம் சரியாக அமையாவிட்டால் 'கோ தூளி லக்னத்தில் செய்து விடுங்கள், அதற்கு எந்த தோஷமும் கிடையாது என்று சோதிடர்கள் குறித்துக் கொடுத்துவிடுவார்கள். கோதூளிலக்னம் அவ்வளவு உயர்ந்தது, சிரேஷ்டமானது.

**நாஸ்யாம் ரிக்ஷம் ந திதிகரணம் நைவ**
**லக்னஸ்ய சிந்தா**
**நோ வா வாரோ ந ச லவவிதிர் நோ**
**முகூர்த்தஸ்ய சர்ச்சா!**
**நோ வா யோகோ ந ம்ருதிபவனம்**
**நைவ ஜாமித்ரதோஷோ**
**கோ தூளி: ஸா முனிபிருதிதா ஸர்வ**
**கார்யேக்ஷ சஸ்தா!!**

தர்ம சாஸ்த்ர நூல் - முகூர்த்த சிந்தாமணி - விவாஹ ப்ரனரணம். கோதூளி லக்னத்தில் ரிக்ஷம் (நட்சத்திரம்), திதி, கரணம், லக்னம், வாரம் (கிழமை), முகூர்த்தம், யோகம், ம்ருத்யு தோக்ஷம், ஜாமித்திர தோஷம் போன்ற எந்த தோஷமும் பார்க்கவேண்டாம். எல்லாச் சுபகாரியங்களுக்கும் கோதூளி நேரம் பிரசித்தமானது என்கிறது தர்ம சாஸ்த்ர நூல். நல்ல முகூர்த்தம் கிடைக்கவில்லை. ஆனால் அசரமாக சுப காரியத்தை முடித்தாகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படும் போது கோதூளி லக்னம் எமக்குக் கை கொடுத்து உதவுகிறது.

சாயங்காலம் சூரிய அஸ்தமனத்துக்குச் சற்று முன்பும் பின்னாலும் வானத்தில் செம்மை (செவ்வானம்) படிந்த நேரத்தில் பசுக்கள் ஊருக்கு வெளியே சென்று மேய்ந்துவிட்டு வீடு திரும்பும் வேளையில் பசுமாடுகளின் குளம்புகளில் இருந்து கிளம்பும் புழுதி வளி எங்கும் பரவி நிற்கும். அந்த வேளை மிகவும் புனிதமானது என்றது தர்மசாஸ்திரம்.

காளிதாஸ மகாகவியும் ரகுவம்ச மகா காவியத்தில் (இரண்டாம் சர்க்கம்) தஸ்யா: குரந்தாஸ பவித்திரபாம்ஸும்... மார்க்கம்.... என்று வர்ணிக்கிறான். காமதேனுவின் பொன்னான நந்தினி என்னும் பசு மேய்ந்துவிட்டு மாலையில் வீடு திரும்பும் போது குளம் படியில் இருந்து கிளம்பும் புழுதியால் பரிசுத்தமான அந்தப் பாதையில் சுதசக்ஷிணை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அன்பே கடவுள்.....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

**என்னும் அரசியும் தொடர்ந்து வருகிறாள் என்று கூறுகிறான்.**

**ஸஞ்சார ந்தாணீ திகந்த ராணீ க்ருத்வா தினாந்தே நிலயாய கந்தும் ப்ரசகரமே பல்லவ ராகதாம்ரா ப்ரபா பதங்கஸ்ய முன்னேஸ்ச தேது!**

'மாலையில் (மேற்குத்) திக்தின் எல்லைவரை தளிர்களின் வண்ணம் போன்ற தன்னுடைய செங்கதிர்களை எங்கும் பரப்பி எங்கும் தூய்மைப்படுத்துகிறான். அதேபோல மாலையில் திரும்பும் வசிஷ்ட முனிவரின் நந்தினிப் பசுவும் செல்லுமிடமெல்லாம் அதன் குளம்படி பட்டுக் கிளம்பும் புழுதியால் புனித தன்மை பரவுகிறது. என்று காளிதாச வர்ணனையைக் காண்கிறோம்.

இவ்வாறு பசு புனிதத் தன்மை பெற்று விளங்குகிறது.

வேதமாதா என்றோம் வேதம் என்றாலே ஞானம், அறிவு என்பது பொருள். புலன்களுக்கு எட்டாத அப்பாற்பட்ட பல உண்மைகளை வாழ்க்கையில் மிகவும் அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய தத்துவங்களை நமக்குத் புகட்டுவதாக வேதத்தையும் அன்னையாகப் போற்றிப் புகழ்கிறோம்.

தேச மாதா - தாய்ப்பாசம் எவ்வளவு முக்கியமோ அதேபோலத் தான் தாய் நாட்டுப் பற்றும் மிகவும் அவசியம் நம் அறிவும் உழைப்பும் சம்பாதிக்கும் பொருளும் தாய் தந்தையர்க்கும் தாய்நாட்டுக்கும் பயன்பட வேண்டும். ஜனனி ஜன்ம பூமிஸ் ச ஸ்வக்காதபி கரீயஸீ. பெற்றெடுத்த தாயும் பிறந்த மண்ணும் - பூமியும் சுவர்க்கத்தையும் காட்டிலும் மேம்பட்டவை என்று சொல்வது வழக்கம்.

ஜகன்மாதா - பராசக்தியை உலகனைத்திலும் உலாவி வரும் உயிர் அனைத்துக்கும் தாயகம் போற்றி வணங்குகிறோம். ஆப்ரஹ்ம கீட ஜனனீ என்றது லலிதா ஸஹஸ்ர நாமம். நான்முகன் முதல் புழு - பூச்சி வரை அனைத்து உயிருக்கும் தாயாவாள். குறிப்பாக மனிதர்களுக்குத்தான் இந்த உபதேசம். இந்த எண்ணம் மனப்பக்குவம் வந்துவிட்டால் சகோதர பாவம் காரணமாக அனைவரிடத்திலும் அன்பு செலுத்தத் தோன்றும். அன்பே கடவுள் என்ற வாக்கியம் இதையே நமக்கு எடுத்து உணர்த்துகிறது,

நன்றி:கலைமகள்

# தனம் தரும்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பி, அதன் மீது வெள்ளி அல்லது செப்புக் குடத்தை வைத்து, அதனுள் அரிசி அல்லது தண்ணீரால் நிரப்ப வேண்டும்.

"இந்தச் செம்பின் மீது தேங்காய் மாவிலை வைத்து, சந்தனம் - குங்குமம் - அட்சதை மற்றும் புஷ்பங்களால் அலங்காரம் செய்ய வேண்டும்.

"வரலட்சுமி தேவியின் திருமுக பிம்பத்தை இந்தக் கலசத்தோடு வைத்து புதிய" வஸ்திரம் அணிவிக்க வேண்டும். தேவியின் பிம்பத்தைத் தாங்கிய இந்தக் கலசத்தை ஒரு சிறிய மண்டபத்தில் வைக்கவேண்டும். பின்பு முறையோடு, வரலட்சுமி தேவிக்குப் பூஜை செய்தல் வேண்டும்!" என்று விளக்கிவிட்டு, அவ்வாறே பூஜை செய்தனர். இதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் சித்திரநேமி. அந்த பூஜா புகையை நுகர்ந்ததாலும், நெய் தீபத்தைக் கண்டதாலும் அவனைப் பற்றியிருந்த குஷ்ட நோய் அகன்றது. அவனது மேனி தங்க நிறங்கொண்டு ஜொலித்தது.



ஆனந்தமடைந்த சித்திரநேமி தேவியை விழுந்து வணங்கி திருக்கைலாயம் அடைந்து, பார்வதி - பரமேஸ்வரன் அருகாமை அடைந்தான்.

"தேவி! தங்களது கட்டளைப்போல் தேவமாதர் செய்த வரலட்சுமி விரத பூஜையைக் கண்டதால் எனது ரோகம் மறைந்து நற்கதி அடைந்துள்ளேன்!" என்றான். அதைக் கேட்ட தேவி "இன்று முதல் நீ கைலாயத்தில் சகல போகங்களை அனுபவித்திருக்கலாம். காலம் கனியும் போது, அந்த வரலட்சுமி விரத மகிமையால் வைகுந்த லோகம் சேருவாய்!" என்று அருட்பாலித்தாள்.

சண்முகப்பெருமானை மகனாகப் பெறுவதற்காகப் பார்வதிதேவியே வரலட்சுமி விரதம் மேற்கொண்டதாக புராண வரலாறுகள் கூறுகின்றன. குண்டினம் என்ற நகரத்தைச் சார்ந்த சாருமதி இந்த விரதத்தை முறைப்படி மேற்கொண்டு சகல பாக்கியங்களையும் பெற்றாள்.

பேரரசன் விக்ரமாதித்தன் நந்தனிடமிருந்து ராஜ்யத்தைப் பெற்றான். நந்தன் திருமணப்பேறு கிட்டாமல் வெகுகாலம் இருந்ததினால் வரலட்சுமி விரதம் அனுஷ்டித்து நல்ல அழகும் குணமும் அழகும் கொண்ட மனைவியைப் பெற்றான். நந்தனின் மனைவி நல்லதொரு மகவைப்பெற வர லட்சுமியை சிரத்தையுடன் துதித்தாள். மூவுலகம் காத்திடும் மகனை ஈன்று மட்டற்ற மகிழ்ச்சியடைந்தாள். இப்படி வரலாற்றில் பலர் பல விதமான தன தான்ய சம்பத்துக்களைப் பெற்று வளமுடன் வாழ்ந்துள்ளார்கள் என்பதால், வரலட்சுமி விரதம் மேன்மையானது என்று எங்கும் பரவியது.

இப்படிப்பட்ட மேன்மையான பூஜையை சாஸ்திரம் அறிந்த புரோகிதர்களைக் கொண்டு செய்வது மிகவும் விஷேசமானது.

பூஜை தொடங்குவதற்கு முன்னால், விரதம் தடங்கலின்றி நடந்தேறிட கணபதி பூஜை செய்த பின்பே வரலட்சுமி பூஜையைத் துவங்க வேண்டும். தேவியைப் புஷ்பங்களால் நூற்றுஎட்டு திருநாமங்கள் கூறி பூஜிக்க வேண்டும்.

நம் சக்திக்கு ஏற்றால்போல் நைவேத்தியங்களை வரலட்சுமி தேவிக்கு நிவேதனம் செய்து, கற்பூர ஆரத்தி எடுத்து வணங்குதல் நலம்.

ஆங்காங்கே காலவர்த்தமானத்துக்கு ஏற்ப கிடைத்த பண்டங்களையே கடவுளுக்கு நிவேதனம் செய்து மகிழ்ந்தனர். இருப்பினும் கனி வகைகள் எங்குமே கிடைக்கும். அதனாலேயே, "நாநாவித பரிமன பத்ர புஷ்பாணி சமர்ப்பயாமி!" என்று கூறுகிறார்கள். பூஜையின்போது வரலட்சுமி தேவியின் பாதங்களில் மஞ்சல் பூசிய மெல்லிய கயிறுகள் வைக்கப்படவேண்டும். பூஜை முடிந்ததும் இதனை ஒரு புஷ்பத்துடன் சேர்த்துக் கட்டி வலதுகர மணிக்கட்டில் கட்டிக்கொள்ள வேண்டும். இந்த கங்கணமே நினைத்திடும் காரியங்களை சித்திக்க வைத்திடும் சக்தி பெற்றதாகும். கடைசியாக, அன்று வீட்டிற்கு பல சுமங்கலியப் பெண்களையும், கன்னிப் பெண்களையும் அழைத்து அவர்களை உபசரித்து, தாம்பூலம் அளிக்கவேண்டும்.

வரலட்சுமி பூஜா விரதத்தை எல்லோருமே மேற்கொள்ளலாம். மனதார அன்னையை வேண்டி வேண்டியதெல்லாம் பெற்று, நலமுடன் வாழ்வது நிச்சயம்.

## மாதங்களில் நான் மார்கழி....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறலாம்.

மற்றெல்லா மாதங்களைவிட, பனி மூடிய மார்கழி மாதத்தின் அதிகாலை வேளையில் இந்த ஓஜோன் பிராண வாயு அதிக அளவாக பூமண்டலத்தில் வியாபித்திருக்கிறது. இந்த மாதத்தின் அதிகாலை நேரத்தில் இந்தப் பிராண வாயுவினால் - கிடைக்கும் சக்தியை நாம் ஏன் வீணாக்கவேண்டும்? ஆறு மணிக்கு காப்பி குடிக்கும் பழக்கம் ஏற்ற பட்டபின், அதற்குப் பால்வாங்க நாம் ஐந்து மணிக்கே எழுந்து போகவில் லையா? ரேஷனில் அதிக சக்கரையோ, மண்ணெண்ணெயோ அதிகாலை நான்கு மணிக்குத்தான் தருவார்கள் என்று அறி வித்தால் அதற்காக நாம் போகமாட் டோமா? அன்றாடத் தேவைகளுக்காக காலத்தை வெல்ல நினைக்கும் நாம் உடலுக்கும், உள்ளத்துக்கும் பயன் தரக் கூடிய நல்ல பழக்கத்தை ஏற்படுத் திக் கொள்ள ஆன்றோர்கள் வகுத்த வழிகளைக் கடைப்பிடிப்பதில் நஷ்ட மென்ன...?

ஆண்டு முழுவதும் முடியாவிட்டா லும், ஆண்டில் ஒரு மாதமாவது இந்த அதிகாலை பிராணவாயுவைப் பெறும் பொருட்டு விழித்திருப்பது ஆரோக்கிய வாழ்வுக்கு அவசியமாகிறது. குறிப்பாக வீதிகளில் இறைவன் நாமத்தைப் பாடிச் செல்கையில் அதிக அளவு ஆக்ஸி ஜனை சுவாசிக்க முடிகிறது. இந்த நல்ல தருணத்தைப் பயன்படுத்த எல்லோரை யும் எழுப்பவேண்டியது ஒரு பொதுப் பணியாக அமைகிறது. தட்டி எழுப்பி தூங்கிக்கொண்டிருப்பவன் கோபத் திற்கு ஆளாகாமல், வீதிவழியே வாத் தியகோஷ்டியுடன் கடவுள் திருநாமத் தைப் பாடிச் செல்கையில் உறங்கிக் கொண்டிருப்பவர்கள் தானாக எழுந்தி ருக்கிறார்கள். கடவுள் நாமத்தைக் கேட்டுக்கொண்டே கண் விழித்தலில் மனம் நிம்மதியடைகிறது. இவ்வாறு புனிதமாயிருக்கிற இந்த மாதத்தை ஏன் சூன்யமாதம் என்றார்கள்.

பாடுபடப் பல நாட்கள், ஓடியாடிச் சில நாட்கள், விழாக் கொண்டாடி களித்து மகிழ ஒருசில நாட்கள் - இப்படிப் பல மாதங்களில் பல நாட் கள் இருக்கும்போது, உடலையும், உள்ளத்தையும் வலுப்படுத்தி அமைதி யும், ஆனந்தமும் பெற ஆர்ப்பாட்ட மில்லாத சில நாட்கள் அமையாவேண் டுமா, அவைதான் மார்கழி மாத நாட் கள்!

தவமியற்ற தடையில்லாமலிருக் கவே கொண்டாட்டங்களையும், அத னால் விளையும் திண்டாட்டங்களை யும் இம்மாதத்தில் தவிர்த்தனர். அத னால், இது சூன்யமாதமாகாது. எப் படியோ இந்த உண்மை தெரியாமல் இதனை ஒதுக்கப்பட்ட மாதமாகவும் தாழ்த்தப்பட்ட மாதமாகவும் சிலர் கருது கின்றனர்.

ஒதுக்கப்பட்டவர்கள் மீதுதான் பக வானுக்கு எத்தனை அன்பு! எத்தனை கருணை!

திதிகளில் அஷ்டமியும் நவமியும் சூன்யத்திதி என்று எல்லா நல்ல காரி யங்களுக்கும் தகாதவை என ஒதுக் கப்பட்டவை. ஒருதுடவை அஷ்டமி நவமி திதிகளின் தேவதைகள் பகவான் ஸ்ரீமன் நாராயணனிடம் தங்கள் குறை களைச் சொல்லி முறையிட்டனர்.

"கவலை வேண்டாம். உங்கள் இரு வர் திதிகளையம், ஆண்டுக்கு ஒரு முறை உலகோரெல்லாம் உயர்வாகக் கொண்டாடும்படி செய்கிறேன்" என்று அருள்பாலித்தார்.

பகவான் ஆவணி அஷ்டமியில் கண்ணனாகப் பிறந்து, அதனை 'கோகு லாஷ்டமி' என்று கொண்டாடச் செய் தார். பங்குனி நவமியில் ராமனாக அவதரித்து, ஸ்ரீராம நவமி என்ற உற் சவத்தால் நவமிக்கு புகழ் தேடித்தந் தார்.

ஒருவேளை மார்கழியும் அவரிடம் முறையிட்டதோ, என்னவோ...?

'மாதங்களில் நான் மார்கழி!' என்று தன்னையே அந்த மாதமாக்கிக் கொண் டார் பகவான். நன்றி:ஞானபூமி

---

## திருமண மாம் திருமணம்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ஹோதா, ப்ரசஸ்தா, பிராமனாசம்ஸீ, போதா, ரேஷ்டா, அச்சாவாகனம், ஆக்னிதரன், முதலான ரித்விக்குகள் உதவுவார்கள்.

திருமாலும் திருமகளுடன் மணமகளுடன் பின்தொடர்ந் துவர வேண்டுகின்றான் மணமகன். பெண்ணே! ஏழுஅடிகள் தொடர்ந்து என்னுடன் வந்துவிட்டாய் எனது தோழி நீ! நமது வாழ்க்கைப் பயணம் தொடங்கிவிட்டது. இனி என்றும் உன்னைப் பிரியமாட்டேன். நீயும் என்னை விட்டுப் பிரி யாதே. இருவரும் இணைந்து இல்லற தருமத்தைக் கடைப் பிடிப்போம். பரஸ்பரம் நமது விருப்பங்களைப் பகிர்ந்து கொள்வோம். எதிலும் நமது மனம் ஒத்ததாய் இருக்கட்டும். நல்ல மனம் படைத்தவர்களாய் இருக்கட்டும். நல்ல மனம் படைத்தவர்களாய் வாழ்வோம்.

......... நான் மனம். நீ வாக்கு.<br>
நான் வானம், நீ பூமி.........<br>
நாம் இணைபிரியாது வாழ்வோம்!

இந்த அற்புதமான மந்திரங்களை மணமகன் சொல்ல வேண்டும். ஆனால் சொல்லும் வழக்கமே இல்லையே!

**அம்மி மிதித்தல்**

மணமகளின் வலது காலைத் தூக்கி மணமகன் அம்மிமீது வைக்கவேண்டும். "ஆசிஷ்ட" மந்திரம் இங்கு கூறப்படும்.

இல்லறவாழ்வில் இன்பதுன்பங்கள் எது வந்தாலும் அசையாமல் ஏற்கும் திடமனத்தோடு உறுதியாக நில்!

**அருந்ததி காட்டல்**

துருவதரிசனமும் உண்டு. பெண்ணே! அருந்ததியைப்பார்! சப்தரிஷி களின் பத்தினிகள் சிறந்த க்ருத்திகாக்கள் என்று புகழப் படுகின்றன. அதிலும் சிறந்தவள் அருந்ததி. கடவுளே! என் துணைவி எட்டாவது கிருத்திகை என்ற புகழ் பெற அருள் வாயாக.

**மாலை மாற்றுதல்**

மணமக்கள் தங்கள் மன ஒப்புதலின் அடையாளமாக மாலைகளை மூன்று முறை மாற்றிக் கொள்வார்கள்.

---

## தமிழை மணந்த....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ந்த நாம், தமிழ்பேசி தமிழர் சூழ்நிலையில் வாழும் நாம், எவ்வித எம் பிறந்த மண்மீது பற்றற்று எம் பேசும் மொழியை விட்டொழிந்து இம்மைக்கும் மறுமைக்கும் வழித்துணையாய் - உயிருற்றாய் விளங்கும் செந்நெறியாம் சிவநெறியைத் துறந்து எம்மை வெறுத்து ஒதுக்கி எம்மை மீளா அடிமைகளாக ஆக்கக் கங்கணம் கட்டும் மாற்றார்க்கு மண்டியிட்டு வாழமுடியும். மணிவாசகர் மாண்பு எம்மை வையத் தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கும் மாண்பு என்பதை யாம் உணராமல் இருக்க முடியுமா?

சிவநெறியை - செந்தமிழை மறந்தால் செந்தமிழர் இல்லை

செந்தமிழை மறந்தால் - சிவநெறியை மறந்தால் எங் களுக்கு வாழ்வுமில்லை. வளமுமில்லை என்பதை உணர் வோமாக! மணிவாசகர் வாழ்வும் வழங்கிய வளமான கருத் துக்களும் இவற்றையே வலியுறுத்தி நிற்கின்றன.

# தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன்

சமயங்கள் எல்லாம் தோன்றுவதற்கு முன் தோன்றியது சைவசமயமே. இதனால் சிவனே எந்நாட்டவருக்கும் இறைவன் ஆகின்றார். இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 7ஆம் நூற்றாண்டில் ஒரு சமயப் புரட்சி தொடங்கியது. அந்தப் புரட்சி காரணமாக சைவம் வைணம் தமிழ் கலைகள் யாவும் காப்பாற்றப்பட்டன. ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு தேவார முதலிகள் மூவர் காலத்தில் சைவமக்கள் நாகரிகம், இறைவழிபாடு, திருக்கோயில் சிறப்புக்கள் திருவிழாக்கள் - தமிழர் வள்ளன்மை, புலவர்கட்கு ஆதரவு பெண்மக்கள் சிறப்பு, அரசர்கள் சமய ஆதரவு, அந்தணர் ஒழுக்கம், யோகிகள் ஞானிகள் வெளிப்பாடு சமய வாழ்க்கை - புறச் சமயங்களின் தாக்கம் - பழக்க வழக்கங்கள் ஒழுக்கங்கள் முதலியவற்றைக் காணலாம். செம் பொருள்களைக் கொண்டுள்ள தேவாரத் திருமுறைகள் சிறப்பாகத் தமிழ் கூறும் நல்லுலகில் சிவபெருமானிடத்தில் தமிழ் மக்கள் கொண்டிருந்த அன்பையும் அறிவையும் பெருக்கி அவர்களுடைய உண்மையான இன்ப வாழ்க்கையை நன்றாக நிலை பெறச் செய்தன.

மூவர் முதலிகள் கோயிலெனச் சிறப்பிக்கப்பெறும் சிதம்பரத்தை அடைந்து ஆடும் கூத்தப்பெருமானை தரிசனம் செய்து அவனருள் வியந்து பாடிய திருமுறைகள் தமிழுக்கும் சைவசமயத்துக்கும் சிறப்புச் செய்வன.

திருஞானசம்பந்தப்பெருமான் சிதம்பரத் திருத்தலத்தின் தெற்குக் கோபுர வாசல்வழியாகவும் திருநாவுக்கரசு நாயனார் மேலைக்(மேற்கு) கோபுர வாயல்வழியாகவும், சுந்தரமூர்த்திநாயனார் வடக்குக் கோபுர வாயில்வழியாகவும் மாணிக்கவாசகப் பெருமான் கீழ்க்(கிழக்கு) கோபுர வாயல்வழியாகவும் தில்லைப் பெருங்கூத்தனைத் தரிசிக்க வந்தார்கள் என்று நூல்கள் பகருகின்றன.

வானத்தை முட்டும் நான்கு பெரிய ராஜகோபுரங்களும் - அகன்று விரிந்த தேரோடும் வீதிகள் நான்கும் - சிவகங்கை எனும் தெப்பக்குளமும் - மாணிக்கப் பிள்ளையார் - கற்பகப்பிள்ளையார் - ஒற்றைக்கல் மண்டபப் பிள்ளையார் - மாம்பழப் பிள்ளையார் - திருமுறை காட்டிய பிள்ளையார் எனப் பல பிள்ளையார்களும் - சிற்சபை - பொற்சபை - நிர்த்த சபை - தேவசபை - ராஜ சபை எனும் ஐந்து சபைகளும் - கூத்தப்பிரான் சிவகாமி அமைந்துள்ள சிற்றம்பலமும் மூலநாதர் உமாபார்வதி சந்நிதியும் ஆடும் கூத்தனை அனுதினமும் பார்த்துக் கொண்டிருக்கும் கோவிந்தராஜா சந்நிதியும் - கோவிந்தராஜா நடராஜா இருவரும் அருகருகே அமைந்த சிறப்பு இங்குதானுண்டு. வெளிப் பிரகாரத்தில் அம்மன் சந்நிதி - பாண்டிநாயகம் என்னும் முருகன் சந்நிதியும் இன்னும் எத்தனை எத்தனையோ சிறப்புக்கள் கொண்டது சிதம்பரம்.

சிதம்பரத்தில் நடைபெறும் அர்த்த ஜாமப் பூசையைத் தரிசித்தால் எங்குமுள்ள சிவபிரான்களைத் தரிசித்த பலன் கிடைக்கும் என்பர். ஏனென்றால் அர்த்த ஜாமப் பூசையின் பின் சகல சிவாலயங்களில் இருந்தும் சிவகலைகள் வந்து திருமூலட்டானேஸ்வரரில் ஒடுங்குவதாகக் கூறுவர்.

கோயில் என்பது தில்லைச் சிதம்பரம், சிதம்பரம் போகாமல் இருப்பேனோ நான் இந்த ஜென்மத்தை வீணாகக் கழிப்பேனோ நான்..... என்று ஓங்கி ஒலித்தவர் திருநாளைப்போவார். இதன் சிறப்பு அளப்பெரியது. முன்னர் இது தில்லைவனம் என அழைக்கப்பெற்றது. பதஞ்சலி விக்கிரபாதர் தவஞ்செய்து வேண்டிக்கொண்டதற்கு இணங்க தைப் பூச நன்நாளில் ஆனந்தத்தாண்டவ தரிசனம் காட்டியருளினார் கூத்தப்பெருமான். அங்கு ஆறுகாலப் பூசை நடைபெறுகிறது. காலையில் 10 மணிபோல் ஸ்படிக லிங்கம் இரத்தினசபாபதிக்கு பொற்சபையில் (பொன்னம்பலத்தில்) அபிஷேக ஆராதனை நடைபெறுகிறது. இந்தக் கோவிலில் நடராஜாவின் வலப்பக்கத்தில் சிதம்பர ரகஸ்யம் உண்டு. பஞ்சாட்சரப்படிகள் உண்டு. இது சிற்சபைக்கும் கனகசபைக்கும் இடையில் உண்டு. சிற்சபைக்கு அதன் வழியேதான் செல்ல வேண்டும்.

பொற்சபை (பொன்னம்பலம்)

பொற்சபை 21600 பொன் ஓடுகளால் வேயப்பட்டுள்ளது. மனிதன் ஒரு நிமிடத்திற்கு 15தரம் மூச்சு இழுத்து விடுவதாகவும், ஒருநாள் 24 மணிநேரத்தில் 21600 தரம் மூச்சை இழுத்து விடுவதாகவும், இதனை அடிப்படையாக வைத்தே 21600 பொன் ஓடுகள் பதித்து வேயப்பட்டதென்பர். கலசங்கள் - சுற்றியுள்ள தூண்கள் எல்லாம் ஒரு காரணத்துடனே தான் அமைக்கப்பட்டது என்பர். பூசைவேளையில் பஞ்ச புராணம் ஓதுவர். தமிழ் வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் பெருங்காரணமாக விளங்கியது தில்லைக்கூத்தன் திருக்கோயில் தான்.

தில்லைத்தலம் போலே சொல்லப் புவிமீதில் தெய்வ தலங்கள் உண்டோ"

"ஆடும் தில்லை நடராஜன்
தன்னை
தேடிப்பணி உனக்கு இல்லைப்
பிணி - மனமே"
"உலகில் உடல் பொருள் நிலை
என்றும் இல்லை
உண்மை இதை உணர்ந்தால்
உனக்கேது தொல்லை
பலமுறைசொல் ஒன்றும் சிவசிவ
என்னும் சொல்லை
பரமனின் பதம் ஒன்றே நிலையான
உயர் எல்லை"

தில்லையில் ஸ்ரீ மூலநாதர் என்னும் சுயம்புலிங்கம் ஸ்ரீ பதஞ்சலி வியாக்ர பாத ஜெயமுனி முதலிய முனிவர்களின் கடுந்தவம் காரணமாக அவர்கள் முன் தோன்றி உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்க அந்த முனிவர்களும் எம்பெருமானின் ஆனந்த நடனக் காட்சியைக் காணும் பாக்கியம் வேண்டும் என்றனர். அந்த வேண்டுகோளை ஏற்று - தை மாசத்தில் வரும் பூச நன்னாளில் பகல் நேரத்தில் அந்த ஆனந்த நடனக்காட்சி கிடைக்குமென அருள்செய்தனர். அது போலவே தை மாதத்தில் பூச நன்னாளில் பகல் வேளையில் முனிவர்கள் காண ஆனந்த நடனம் ஆடி அருளினார் ஆண்டவன். இந்தத் தைப்பூச நன்னாள் மிகவும் சிறப்பானது.

திருச்சிற்றம்பலமே நம் பலம்.

சைவப் புலவர்:
கி.சிவமணி



சைவபரிபாலனசபை முன்பள்ளி சிறார் விளையாட்டுப் போட்டி - 2003 பிரதமவிருந்தினர் பிரமுகர்களுடன் சிறார்கள்...

கைலயங்கிரியின் அற்புதக்காட்சி



## எமது அன்புக்குரிய வாசகர்களே!

1. நாவலர் சைவசமய பிரசாரத்திற்கு மிக முக்கியமாக கொண்டவற்றுள் –
   - ☆ அச்சு இயந்திரசாலை அமைத்தல்
   - ☆ சைவ பத்திரிகை வெளியிடுதல்
   - ☆ சைவ – தமிழ் நூல்கள் வெளியிடுதல்

என்பவை குறிப்பிடத்தக்கவையாகும். அந்த வழியிலே சைவபரிபாலன சபை பெரும்சிரமத்தின் மத்தியில் –

- ☆ மீண்டும் சைவப் பிரகாச இயந்திரசாலையை நவீன கனனி – ஒவ்செற் இயந்திர வசதிகளுடன் ஆரம்பித்துள்ளது.
- ☆ சைவ – தமிழ் நூல்களைத் தொடர்ந்து பிரசுரித்து வருகின்றது.
- ☆ இந்து சாதனம் THE HINDU ORGAN உங்கள் கைகளில்!

இந்துசாதனம் – சந்தாதாரராக வேண்டியது உங்கள் கடமையல்லவா?

வருட சந்தா – ரூபா 150/=

# தியாநம் பற்றிய ஞானம்

தியாநம் என்றால் என்ன?

ஞாபகம் என்பதுதான் தியாநம்.

இந்த ஞாபகம் இல்லாமல் எதை நம்மால் செய்ய முடியும்? என்னதான் சாதிக்க முடியும்?

மனம் உள்ளவன் மனிதன்.

மனிதனின் மனத்தில் ஞாபகம் என்ற ஒன்று இல்லை என்றால் என்னாகும்? மறதி அதிகம் உள்ளவர்களைக் கவனித்தால் தெரியும். மறந்துவிட்டு எத்தனை முறை மன்னிப்புக் கேட்கிறார்கள்! இந்தக் கவனம் என்பதுவ தியானம் தான்.

அதாவது, எல்லாவற்றிலும் கவனத்தோடிருப்பது. வேண்டுமானால் முழுக்கவனத்தோடிருப்பது என்னலாம்.

முழு மனமும் திரண்டு ஒரு முகப்பட்டு ஒன்றில் மட்டுமே கவனமாக இருந்தால் அதைத் தியாநம் என்று கூறலாம்.



இப்போது சொல்லுங்கள் உங்களிடம் தியாநம் உள்ளதா?

நேரத்தால் நிச்சயிக்கப்படுவது

சரி: முழு மனமும் திரண்டு ஒரு முகப்பட்டு ஒன்றில் மட்டுமே கவனமாக நிற்கிறதையா. இது தியாநம் தானே?

அப்படி எத்தனை நேரம் நிற்கிறது?

ஒரு விநாடி.

அப்படியெனில் அது தியானமில்லை. ஒரு குறிப்பிட்ட காலம் அப்படி முழுமனமும் ஒன்றில் மூழ்கியிருந்தால் தியாநமாகும். நேரத்தால் நிச்சயிக்கப்படுவது தியாநம்.

எவ்வளவு காலம் முழுமனமும் குவிந்து ஒரே நினைவில் இருந்தால் தியாநமாகும்?

பன்னிரண்டு விநாடிகள் அப்படி மனம் வேறெதையும் அறியாத நிலையில் ஒரே நினைவின் மீதிருந்தால் அதை ஒரு தாரணை என்பர்.

12 தாரணைகள் மனம் ஒரு பொருளிலே மட்டும் தரித்திருக்குமேயானால் அது ஒரு தியாநமாகும்.

அதாவது மனம் ஒரே சங்கதியில் (தியாநத்திற்கு எடுத்துக் கொண்ட பொருளில்) இரண்டு நிமிடங்கள் இருபத்தி நான்கு விநாடிகள் நிலைத்து நின்றால் அதைத் தியாநநிலை என் போம். இரண்டு மணி நேரமாவது ஜெபத்தைச் செய்தால்தான் ஒரு தியாநம் கிட்டும்.

தாரணை என்பது ஒரு பொருளின் மனம் தங்கியிருப்பது அல்லது ஒரே பொருளை மனம் தரித்திருப்பதாகும். இதை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நீட்டித்திருப்பதே தியாந நிலையாகும்.

அதாவது நீர் சொட்டுதல் இடைவெளியின்றித் தொடரும் போது நீர் கொட்டுதல் என்று ஆகும். இது போலத் தாரணை இடைவெளிவிடாமல் தொடர்ந்திருக்கும்போது தியானமாகி விடுகிறது.

தரணை என்பதே மனம் ஒரு முகப்பட்ட நிலை. Concentration என ஆங்கிலத்தில் கூறுவர். அது தொடர்ந்து நடக்கும்போது இதுவே Meditation என்ற தியாநம் ஆகிவிடும்.

ஆகவே இந்தத் தியாநத்தை நேர அளவு நிச்சயிக் கிறது என் கிறோம்.

மூன்று முக்கிய நிலைகள்

'தியானம் என்பது ஒரே நினைவில் கொஞ்சகாலம் தொடர்ந்து நீடிப்பது' என்று கூறி முடித்துவிட முடியும்.

மூன்று நிலைகளை இணைத்துள்ளதே தியாநம் எனும் முற்றிய நிலைக்கு அதற்கு முந்திய இரண்டாம் நிலை தாரணை எப்படி முக்கியமோ, அப்படி தாரணைக்கு முதல் நிலையான பிரத்யாஹாரம் மிக அவசியம்.

1. பிரத்யாஹாரம், 2. தாரணை, 3. தியாநம் - இந்த மூன்றும் இணைந்த நிலைகள்.

இவைதான் தியான வெற்றியான, தியாநம் பழுத்துத் தரும் ஞானமாகிய சமாதிக்கு அடிப்படை. தியாநம் முற்றுப் பெறும்போது இந்த சமாதிநிலை வாய்க்கும். இது மனம் அழிந்தநிலை. இதையே சித்தர்கள் 'மனமிறந்தநிலை' என்பர். நிரோதம் எனும் மனநிலை என்பார் பதஞ்சலி முனிவர்.

நன்றி:கலைமகள்


இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு

சைவ பரிபாலன சபையினருக்காக அச்சிட்டு

வெளியிடுபவர் : இ.மகேந்திரன்

ஆசிரியர் : சுடர்.இமகேந்திரன்

அச்சுப்பதிப்பு:

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை (கணனி அச்சகம்)

முகவரி :

450, கேகேஎஸ்.வீதி, யாழ்ப்பாணம்


சேரல்:

..................................

..................................

..................................


இந்துசாதனம்,
450,கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.